

# நவராத்திரிப் பாடல்கள்



தொகுப்பு :


ரி. தனேஸ்

13A கலைப் பிரிவு

மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி


தனிச் செயற்றிட்டம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | நவராத்திரிப் பாடல்கள் |
| தொகுப்பு | : | ரி. தனேஸ் |
| முகவரி | : | திருமலை வீதி, கறுவாக்கேணி<br>வாழைச்சேனை |
| தொலைபேசி | : | 065 2258039, 0775382649 |
| வெளியீடு | : | மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| அளவு பக்கம் | : | A5 |
| வகை | : | தொகுப்பு நூல் |
| திகதி | : | 19.10.2007 |
| மொழி | : | தமிழ் |
| விலை | : | ரூபா 35 |

# அதிபர் உரை

மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரியாகிய எமது பாடசாலையின் க.பொ.த (உ/த) மாணவன் செல்வன் தங்கவேல் தனேஸ் தனது செயற்திட்டமாக நவராத்திரிப்பாடல்கள் என்னும் நூலை வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது. சமயப்பண்பாடும் விழுமியங்களும் அருகி வரும் இக் காலகட்டத்திலேஇத்தகைய முயற்சி மனதிற்கு தெம்பை ஊட்டுகிறது. இம் முயற்சி மாணவரின் நன் நோக்கை வெளிப்படுத்தும் அதே வேளை ஏனைய விதம்களால் சிறப்பாகவும் பயன்படுத்தல் படவும் வேண்டும். மொழி வளர்ச்சியும், சமய வளர்ச்சியுமே ஏனைய துறைகளில் முன்னேற்றமடையச் செய்வன என்ற வகையில் இம் முயற்சிக்கு எனது ஆசியை வழங்கி பாராட்டை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**வி. சின்னத்தம்பி**
கல்லூரி அதிபர்

# முன்னுரை

மக்கள் மத்தியில் சமய உண்மைகளையும் விழுமிய கருத்துக்களும் குறைந்து கொண்டு வரும் இக்கால கட்டத்தில் இவ்வாறான நூல் தொகுப்பு வெளியீட்டானது கற்போருக்கு மனசாந்தியையும் தெய்வீக உண்மையும் தரவல்லது. என நினைக்கிறேன்.

நவராத்திரி விரதம் என்றால் என்ன? அது எவ்வாறு அனுஸ்டிக்கப்படுகிறது, அதன் முக்கியத்துவம் என்பனவும் மாணவர்கள் மத்தியில் வெளிக்கொண்டு வருவதும் இன் நூலின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு இச் செயல்திட்டத் தினை செய்வதற்கு முன்னேடுத்துள்ளேன் இச் செயற்திட்டத்தினால் என்றும் ஆதரவு கிட்டும் என நம்புகிறேன்.

இவை அனைத்திற்கும் உறுதுணையாய் இருந்த இறைவனுக்கு முதற் கண் நன்றியினை தெரிவித்து இச் இச்செயற்திட்டத்தினை செய்வதற்கு அனுமதி அளித்த எமது கல்லூரி அதிபருக்கு நன்றியை தெரிவித்து பொறுப்பாய் இருந்து வழிகாட்டிய ஆசிரியர் திரு. P. இளங்கோ அவர்களுக்கும் இவ் வெளியீட்டுக்கான தங்கள் ஒத்துழைப்பை நல்கிய ஆசிரியர் திரு. E. ரவிச்சந்திரன் ஆசிரியர் S. ஜெயரஞ்சித், ஆசிரியர் திரு. ஆ. பவானந்தலிங்கம், ஆசிரியர் செல்வி. ஆ. இந்திராதேவி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி
நூல் தொகுப்புக்கள் பாளர்
வாழைச்சேனை

# நவராத்திரி

அதர்மம் அழிந்து, தருமம் வென்று செழிக்க வேண்டும் என உணர்ந்து திருவிழாக்களுள் நவராத்திரியும் ஒன்று அம்பிக்கைக்குரிய நவராத்திரி ஒரு வருடத்தில் நான்கு வகையாக கொண்டாடப்படுகிறது . தை மாத அமாவாசைக்கு பின்பு வரும் ஒன்பது நாட்கள் 'மகா நவராத்திரி' எனவும், பங்குனி மாத அமாவாசைக்குப் பின்பு வரும் ஒன்பது நாட்கள் 'வசந்த நவராத்திரி' எனவும் ஆனிமாத அமாவாசைக்கு பின்பு ஒன்பது நாட்களும் 'ஆஷாட நவராத்திரி' எனவும் புரட்டாதி மாத அமாவாசைக்கு பின்பு வரும் ஒன்பது நாட்களும் 'சாரதா நவராத்திரி' எனவும் அழைக்கப்படுகிறது. இவற்றுள் புரட்டாதி மாத நவராத்திரிக்கு மிகுந்த மகிமை உண்டு.

தேவி வழிபாட்டின் தொன்மைக்கு கன்னி மாதத்தில் நடை பெறும் நவராத்திரி வழிபாடே சான்று. வட நாட்டார் இதனை 'தசரா' என அழைப்பர். இவ்வழிபாடு எப்போது தோன்றிய தென்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மிகத் தொன்மை வாய்ந்தது. வீடுதோறும் இவ்வழிபாடு மிகப் பண்டுதொட்டே நடைபெற்று வந்துள்ளது. இச்சக்தி வழிபாடு சிறிது பெயர் மாற்றங்களுடன் உலகம் முழுவதும் பரவியிருந்திருக்கிறது.

புரட்டாதி மாதத்தில் அமாவாசையை தொடர்ந்து வருகின்ற ஒன்பது நாட்களும் 'நவராத்திரி' எனப்படும். பத்தாவது நாள் 'விஜயதசமி' எனப்படும் சக்திக்கு ஒன்பது இராத்திரி 'நவராத்திரி' சிவனுக்கு ஒரு இராத்திரி அது சிவராத்திரி இதிலிருந்தே சக்தி வழிபாட்டின் மேன்மை விளங்கிறது. மைசூரிலும், வங்காளத்திலும் 'தசாரக்கொண்டாட்டம்' ஒரு தனிச்சேவையுடன் கொண்டாடப்பட்டு வருகிறது தமிழர் வளம் பெருக்கி விளைவிக்கும் மண்ணை 'நிலமகள்' என்றார்கள். செல்வத்தைத் திருமகள் என்றார்கள். வீரத்தை வீரத்திருமகள் அல்லது துர்க்கை என்றார்கள்.

மக்களுக்கு வீரம், செல்வம், கல்வி, மூன்று தேவை என்பதற் காகவே முதல் மூன்று நாட்களையும் 'துர்க்கா' வழிபாடாகவும் அடுத்த மூன்று நாட்களையும் 'இலக்குமி' வழிபாடாகவும் கடைசி மூன்று நாட்களையும் 'கலைமகள்' வழிபாடாகவும் கொண்டாடி

வருகின்றனர். 'பத்தாவது நாள்' விஜயதசமி அல்லது 'வெற்றித்திருநாள்' எனப்படும். தேவி மகிடாசுரனை வதைத்த திருநாள். மகிடம் என்பது தாசம குணமாகும். தாசமகுணத்தை போக்கிச் சாத்வீககுணத்தை கொடுத்த திருநாள். அன்றைய தினம் எல்லா ஆயுதங்களுக்கும் ஓய்வு கொடுத்த ஆயுத பூஜை செய்யும் திருநாள். பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளுக்கு அன்றைய தினம் பெரும் கொண்டாட்ட தினமாகும். கற்றற்குரிய வயதை எட்டிய பிள்ளைகளுக்கு வித்தியாரம்பத்திற்கு ஏற்ற நாள்.

நவராத்திரியில் வரும் அஷ்டமி 'மஹாஷ்டமி' என்றும், இநவமி 'மஹாநவமி' என்றும் பெயர் பெறும். ஆதலால் இதனை 'மகஹா நோன்பு' என்றும் மகர் நோன்பு என்றும் அழைப்பர். சரத் காலசம்பந்தம் ஆச்வின மாதத்தில் வருவதால் இதற்குச் 'சாரதா நவராத்திரம்' என்று பெயர் இதே போல் சித்திரை மாதத்தில் 'வசந்த நவராத்திரம்' கொண்டாடப்படுகிறது. சரத்து வசந்தம் ஆகிய இரு பருவ காலங்களும் யமனுடைய கோரப்பற்கள் என்று வருணிக்கப்படுகிறது. இக் காலங்களில் நோய்கள் மலிந்து மக்கள் பெருவாரியாக நாசம் அடைகின்றனர். இக் காலத்தில் நடை பெறும் பூஜையால் மக்கள் மலினமடைவதைத் தடுக்கலாம். என்று தேவி புராணம் கூறுகிறது.

கலையிழகு வெளிபடுத்தும் பண்டிகையே பொம்மைகளை கொழுவைக்கும் நவராத்திரி பண்டிகையாகும். இக்கொழு வைக்கும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. தெய்வீக பிராத்தனை கலையார்வம் இவைகளை பிரதிபலிப்பதே இவ்விழாவின் முக்கிய அம்சமாகும் . வங்காளத்தில் காளி பூஜையும், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் ஆகிய இடங்களில் ராம லீலையும், மைசூரில் சாமுண்டீஸ்வரி பூஜையும் முக்கிய இடம் பெறுகிறது. ஒன்பது இரவுகள் சத்தியாக விளங்கியவள் பத்தாம் நாளன்று சிவத்துடன் சேர்ந்து கலந்து அர்த்தநாரீயாகிவிடுகிறாள்.

புராணக் கதைகளின் படி ராமபிரானின் மூதாதையர்களின் ஒருவரே இவ்விழாவை முதன்முதலில் கொண்டாடிக்க வேண்டும். என்று ஒரு ஐதிகம் உண்டு. அவர் அமாவாசை இரவு தொடங்கி பாரதப் புண்ணியபூமியில் ஓடும் ஒன்பது நதிகளில் இருந்து ஜலத்தை

ஒன்பது குடங்களில் கொண்டு வந்து அவைகளின் தேவியின் ஒன்பது அம்சங்களை ஆவாஹனம் செய்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னிப் பெண்ணைத் தேவியாக பூஜித்து வந்தார். 'சரஸ்' என்றால் நீர் என்றும் ஒளி என்றும் அர்த்தம் சூரியன் ஒளியை அளிப்பதால் அவனுக்கு 'சரஸ்வான்ஹஎன்று பெயர் கூறுவதுண்டு. வாக்தேவியின் அருள் இருந்தால் வாக் தேவியின் அருள் இருந்தால் வார்த்தைகள் தங்குதடையின்றி பிராகமாக வெளிவருவதற்கு சந்தேகம் என்ன?

விஜயதசமியிலன்று அரச குடும்பத்தினர் வன்னிமரத்தடிக்குச் சென்று அம் மரத்தை பூஜை செய்வர். இந்த வைபவத்தை ஒட்டியே அன்று கோயில்களில் அம்போடும் உற்சேவம் நடை பெறுபெறு கிறது. வன்னி மரம் பாவத்தையும், சத்துருக்களை அழிக்ககூடிய தென்று சொல்வதுண்டு துர்க்கையின் உருவம் என்று வன்னிமரத்தை வருணிப்பதுண்டு பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தின் போது தங்கள் ஆயுதங்களை வன்னிமரத்தின் மேல் ஒழித்து வைத்திருந்து. எடுத்துச் சண்டை போட்டு வெற்றி பெற்றனர்.

பெரும் ஆற்றல் பெற்ற மகிஷாசுரன் சாகா வரம் வேண்டி பிரம்மனை நோக்கித் தவம் இருந்தான். பிரமனை வேறு வரம் கேட்குமாறு பணித்தான். மகிடன் கன்னி~~யை~~ ஒருத்தியை தன் வேறு எவராலும் தனக்கு மரணம் நிகழக்கூடாது என வரம் பெற்றான். உலகை ஆட்டிப் படைத்த மகிடனின்கொடுமைகளைத் தடுக்க முடியாத மும் மூர்த்திகள் முதலியோர் ஒன்று கூடி அன்னையை வேண்ட, அம்பிகை சத்வ, தாமே, ரஜோ என முக்குணங்களும் கொண்டு அற்புத ஆற்றல் மிக்க துர்க்கையாக புராட்டாதி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியின் அவதரித்து ஒன்பது நாட்கள் விரதமிருந்து சுக்லபட்ச அஷ்டமியில் அசுரனை வதம் செய்தல் நவமியின் அன்னையை, அனைவரும் வெற்றித் திருமகளாய் கொண்டாடி மகிழ்ந்தனர். இப்படி அன்னை அசுரனை அழிக்கத் துர்க்கையகயாகத் தோன்றிய திருநாளில் நவராத்தி ஆரம்பம்மா கிறது. அசுரனை அழித்து வெற்றி கொண்டதை கொண்டாடும் பொருட்டே இறுதி நாளென்று விஜயதசமி கொண்டாடப்படுகிறது எனலாம்

## திருச்சிற்றம்பலம்

பாஹி பாஹி கஜானனா பார்வதி நந்தா கஜானனா
மூசிக வாகன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமர கருணா கஜானனா விளம்பித ஸீத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மகேஷ்வர புத்திரா கஜானனா
விக்ன விநாயக கஜானனா நாமஸ்தே கஜானனா

## நவராத்திரிப் பாடல்

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைப தின இணைபடி சரணம் சரணம்
சரவண பலகுஹ சரணம் சரணம்
சினல்மலி யுடையல சரணம் சரணம்
சிவ சிவ சரணம் சரணம்
உலை வறுமொருபரை சரணம் சரணம்
உமை சிவயம்பிகை சரணம் சரணம்

## ஸ்ரீ சரஸ்வதி காயத்திரீ

ஓம் மகா தேவியை ச வித்மஹே ப்ரஹ்ம
பத்ன்யை ச தீ மஹி!
தந்தோ வாணீ ப்ரசோதயாத்!!

**பொருள்**

மஹா தேவியை அறிவோமாக பிரம்மம்
பத்தினியைத் தியானிப்போமாக அத்தகைய
தியானத்தில் வாணி நம்மை தூண்டுவிப்பாளாக

## ஸ்ரீ தேவி நமனம்

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவ ஸர்வார்த்த -- ஸாதிக!
சரண்ய த்ரயம்பகே கௌரி நாராயனி னாமேஸ்துதே!!

ஸ்ருஷ்டி - ஸ்திதி – விநாசானம் கத்திபூதே ஸநாதனி!
குணாச்ரயே குணமயே நாராயணி நாமோஸ்துதே!!

சரணாகத – தீனார்த்த – பரித்ரான – பராயனே!
ஸர்வஸ்யார்த்தி - ஹரே தேவி நாராயனி நமோஸ்துதே!!

ஜய நாராயணி நமோஸ்துதே!!
ஜய நாராயணி நமோஸ்துதே!!
ஜய நாராயணி நமோஸ்துதே!!

# தேவியின் திருநாம அர்ச்சனை

அம்மணி ஜக தம்பிகே கருணாகரீ பரமேஸ்வரி
கண்மணி ஜெய கௌரி காங்கயி கார்த்திகே திரி நேத்திரி
தண்மயீ உப சாந்தினி சிவ. சாம்பவீ ஏகாம்பரீ
சின்மய் சுப சீலி மாலினி தேவி சௌந்தரி ஓம் நமோ

பத்ர காளி துர்க்கா பவானி பராசத்தி பரிபாலினி
சித்சொரூபினி சிம்மவாகினி திவ்யராஜ ராஜேஸ்வரி
வித்து பூசனி மீனலோசினி, வீரமாத்தினி விமலினி
சத்ய வாசனி, நித்ய கன்னி. தயாபரீநம, ஓம் நமோ!

குண்டலீ சந்த்ரமண்டலீ! இளங் கோமளீ இன்பஸ்மாமளீ
கண்டிகா, சாமுண்டி, பைரவி, சிவித்ரீ, ஜெய காயத்ரீ
அண்ட நாயகி ஆபத் பாந்தவி அமுத ஞானபயோதரீ
தொண்டர் சாதகீ தூய வானதி சோமசேகரி ஓம் நமோ

சுத்த சக்தீ சுடர்கொடி திவ்ய சுந்தரி ஸ்ரீ ரந்திரி
வித்தகீ தெய்வ நர்த்தகீ ஜய விஜயி பாபவி நாசினி
சித்த ரஞ்சினி தெய்வகுஞ்சரி தேவதா உமா பார்வதீ
நித்ய வாணி நிரஞ்சனி மலை நீலி சங்கரி ஓம் நமோ

அஸ்ட லட்சுமி அபய ஹஸ்தனி, அமலினி செங்கமலினி
நிஷ்டை யோகினி நிமல வாகினி நிஷ்க ளங்கசந் யாசினி
துஷ்ட நிக்ரஹி தூய வைஷ்ணவி, ஜோதி வேனி சுமஞ்சலீ
சிஷ்ட ரட்சகி ஸ்ரீ வ ராகினி சீதளி நம ஓம் நமோ!

பூரணி ஞான பூசனி வேத போதீனி தாம் சாதனீ
ஆரணி நவ சீரணி உல காண்டவீ உக்ர தாண்டவீ
காரணீ சிவகாமினீ, ஜீவ கானீஜகன் மோகினி
நாரணீ பவதாரணீ புவி நாயகி நம ஓம் நமோ!

# தேவி புகழ்

மாணிக்க வீணை ஏந்தும்
மாதேவி கலை வாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து
பாடவந்தோம் - அம்மா பாடவந்தோம் - (2)
(மாணிக்க)

நாமணக்கப் பாடி நின்றால்
ஞானம் வளர்ப்பாள்
பூ மணக்க பூஜை செய்தால்
நீ மகிழ்வாய்
(மாணிக்க)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள் - எங்கள்
உள்ளக் கோவிலியே உறைந்திருப்பாள்
கள்ளமில்லாமல் வரும் அன்பருக்கே என்றும்
அள்ளி அறிவைத்தரும் அன்னையும் நீயே
(மாணிக்க)

வாணி சரஸ்வதி மாதவி பார்வதி
வாக தீஸ்வரி மாலினி
காணும் பொழுதும் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம் தரும் வேணி நீ
நான்முக நாயகி மோகன ரூபினி
நான்மறை போற்றும் தேவி நீ
வானவர் அமுதே தேன்மழை சிந்தும்
கான மனோகரி கல்யாணி........
அருள்வாய் நீ இசை தருவாய் நீ
இங்கு வருவாய் நீ நலம் தருவாயே அம்மா
(மாணிக்க ~~குழு~~)

# குமர குருபர சுவாமிகள் அருளிச் செய்த
# சகலகல வல்லிமாலை

வெண்டாமரைக்கன்றி நின்பதங் தாங்க வென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ? துகம் ஏழும் அழித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித் தாக வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே சகலகலா வல்லியே

நாடும் பொருட்சுவை தோய்தர நாற்கவியும்
பாகும் பணியிற் பணித்தருள்வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதன குன்று மைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது ஆர்த்துடன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ? உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலா வல்லியே

தூக்கும் பனுவற் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணை கடலே சகலகலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாத பங்கேருக மென்
நெஞ்சத் தடத்தல ராததென்ன நெடுங்தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந் நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய் சகலகலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியும் தீங்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக் கண் நல்காய் உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகலகலா வல்லியே

சொல் விற்பணமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல் வித்தையும் தந்தடிமை கொள்வாய் நளினாசனஞ் சேர்
செல்விக் கரி தென் றொரு காலமுஞ் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலா வல்லியே

சொற்கும் பொருட்டும் உயிராம் மெஞ்ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்? நிலந்தோய் புழைக்க
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம் புயத்தாயே சகலகலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழா மேற்பட்ட மன்னருமென
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலா வல்லியே.

# சக்தி துதி

**ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்**
**ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்**

சுந்தர வதனி சுகுண மனோகரி
மந்த காசமுடை மதி வதனி
சந்தன குங்குமம் அலங்கார முடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே
(ஓம் சக்தி ஓம்)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன் புகழ் பாடிடவே
(ஓம் சக்தி ஓம்)

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புலிமேல் விளங்கும்
மங்கல நாயகி மகிழ்வாய் அருள்வாய்
(ஓம் சக்தி ஓம்)

வேதங்கள் உண்ணை வேண்டிப் பாடிட
விரும்பி சரஸ்வதி வீனை வாசித்திட
சதானந்தமான சோதீஸ் வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்
(ஓம் சக்தி ஓம்)

# பராசக்தி துதி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய வெனத்தினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத்தா – ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய - அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலமை - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி பலமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினி எங்கும் வேற்றுமை அகல
கருத்தினி லன்பருள்வாய் - அம்மம்மா கருத்தினில பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுடன் அடைக்கலம் நாம் - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்துக் கமைத்யைத் தா – ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

# தேவியின் புகழ்

வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட் பொருளாவாள் - (வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலை
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமேவடி வாகிடப் பெற்றாள் - (வெள்ளைத்)

வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குல தெய்வமாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந் தூடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். - (வெள்ளைத்)

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வமே
உய்வமென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக்குயிராகிய தெய்வம்

செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கை வருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம் - (வெள்ளை)

செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்தனம் இவட்கே செய்வதென்றால்
வாழி ய.்.திங் அகளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணு முணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம் - (வெள்ளை)

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரன்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடுகல்வி யிலாத தொ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னைகேண்மை
கொள்ள வழியிவை கண்டீர் - (வெள்ளை)

ஊணர் தேசம் யவனர் தந்தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேண கன்ற தோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப் பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ் கடற்கப் புறத்தினில் அன்றும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியின் ஒளிமிகுந் தோங்க - (வெள்ளை)

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிதிழைக்கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மானமற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்பு முயலுவம் வாரீர் - (வெள்ளை)

இன்னனுங் கணச் சோலைகள் செய்தல்
இனிய தீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டம்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிலுத்தல்
அனையா வினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத் தறிவித்தல் - (வெள்ளை)

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச் சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதரீக ளெல்லாம்
வானி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர் - (வெள்ளை)

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண் : டியந்தைக் காந்தாரம் தலம் : பொது

வேயுறு தோளிப்பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் ரவர்க்கு மிகவே

## திருவாசகம்

லம் : திருக்தோணிபுரம்

அம்மை அப்பா ஒப்பில்லா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொறதினைச் சுருக்கம்
புழுத்தலைப் புலையனேன் நனக்குச்
செம்மையே சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருநவ தினியே

## திருவிசைப்பா

(தலம் + சிதம்பரம்) பண் : பஞ்சம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரல் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே

அளிவளர் உள்ளத் தானந்தக்கணியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் சடத்துக்கள் தாயைத்
தொண்டுள்ளேன் விளம்புமாவிளம்பே

## திருப்பல்லாண்டு

பண் : பஞ்சமம்

மிண்டு மனத் போமின்கள் மெய்யடியர்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்ங் குடி குடி மிசற்காட்
செய்மின் குழாம்புகுந்து
அண்ட கடந்த பொருளாள வில்லாதோர்
ஆனந் வெள்ளப் பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளளென்றே
பல்லாண்டு கூறுவதே

## திருமந்திரம்

யாவருக்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவருக்கு மாம்பசு வுக்கொரு வாயுரை
யாவருக்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவருக்கு மாம்பிறருக்கு இன்னுரை தானே

## பெரிய புராணம்

தலம் : தில்லை

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆசி
சோதியாய் உணர்வும் ஆதித் தேன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியாய் நிற்கும் தில்லைப் பொதுநடத் போற்றி பேற்றி

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையது எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்

*"இதுவே உலக நியதியும்,*
*எனது படைப்பின் சாரம்சமாகும்."*

**– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –**

A·SRIDHAR